Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, AUGUST 20 2024

செவ்வாய்க்கிழமை ஆகஸ்ட் 20, 2024 | ஒளி: 10 கதிர் 032 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## தாவல் வாரம்

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவான அரசியல்வாதிகளின் பலர், கட்சி தாவல்களை இவ்வாரம் முன்னெடுக்க உள்ளனர் என உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட கிட்டத்தட்ட முப்பது வெவ்வேறு அரசியல்வாதிகள் கட்சி மாறிவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் பொது வேட்பாளர் அரியநேந்திரனுக்கு

# 14 நாள் அவகாசம்

**மூன்று பிரதான வேட்பாளர்களுடனும் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாகவும், பேசிய விடயங்களையும் கூட்டத்தில் தெரியப்படுத்தினோம். சில முன்னேற்றகரமான கருத்துக்களை அவர்கள் தெரிவித்துள்ளார்கள்**

**என்னுடைய வீட்டிற்கு வந்து நாமல் ராஜபக்ஷ, சந்தித்து இருந்தார். அவர்களிடம் உள்ள விடயங்களை தெரியப்படுத்தினார். அது அதி தீவிர சிங்கள வாக்குளை பெற்றுக் கொள்வதை நோக்கமாக கொண்டிருந்தது**

*க.அகரன்ஜ*


ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ள அரியநேந்திரனிடம் விளக்கம் கோரி இரண்டு வார கால அவகாசம் கொடுத்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அதுவரை கட்சிக் கூட்டங்களிலும் பங்கேற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (18) இடம்பெற்ற கட்சியின் மத்தியக் குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதான வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எமது அடிப்படை

தொடர்ச்சி P2





# 27 அங்குலம் நீளமானது

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சக அலுவலகத்தின் பிரதானி திருமதி கங்கானி கல்பானி லியனகே தெரிவித்தார்.

வாக்குச் சீட்டு அச்சடிப்பது தொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து, வாக்குச் சீட்டு முத்திரைகளைக் கடனாக வழங்கும் பணி தொடங்கியுள்ளது. இம்முறை வாக்குச் சீட்டு 26 அல்லது 27 அங்குலம் நீளமாக இருக்கலாம் என திருமதி கங்கானி கல்பானி லியனகே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ஹரின், மனுஷவுக்கு புதிய நியமனம்

முன்னாள் அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் ஜனாதிபதியின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

விளையாட்டு, காணி மற்றும் சுற்றுலா விவகாரங்களுக்கான ஆலோசகராக ஹரின் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளதுடன், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான ஆலோசகராக மனுஷ நாணயக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 41(1) சரத்தின் கீழ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## "ஹரின், மனுஷ நியமனம்: சட்டங்களை மீறும் செயல்"

முன்னாள் அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரை ஜனாதிபதி ஆலோசகர்களாக நியமித்தமை தேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் புதிய நியமனங்களைத் தடுக்கும் வகையில் தேர்தல்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாகவும், சுற்றறிக்கையை மீறி குறித்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் முன்னைய அமைச்சுக்களின் ஆலோசகர்களாக ஹரீன் மற்றும் மனுஷாவை நியமித்துள்ளதாகவும், இதன் மூலம் இந்த அமைச்சுக்களின் செயற்பாடுகளில் தலையிடுவதற்கும், வாகனங்கள் மற்றும் நிதிகள் போன்ற சலுகைகள் மற்றும் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் இடமளிப்பதாகவும் அநுர திஸாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மதச் சின்னங்களை பயன்படுத்த தடை

தேர்தல் பிரசாரங்களுக்கு தேசியக் கொடி அல்லது மதச் சின்னங்களைப் பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களுக்கு தேசியக் கொடியைப் பயன்படுத்தும் கட்சிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





## சிலிண்டர் சின்னத்துக்கு சிக்கல் இல்லை

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்கப்பட்ட எரிவாயு சிலிண்டர் தொடர்பான ஆட்சேபனைகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு நிராகரிக்கத் தீர்மானித்துள்ளது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எரிவாயு சிலிண்டர் சின்னம் தமது அணிக்கு வழங்கப்பட்டதாக அரசியல் கட்சியொன்று முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்குத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க பதிலளித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலின் போது காஸ் சிலிண்டர் சின்னத்தைக் கேட்டு பலர் கோரிக்கை வைத்திருந்தனர். ஒதுக்கப்பட்ட சின்னங்கள் அரசியல் கட்சிகளுக்கு மட்டுமேயாகும். மற்றவை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். எனவே, பொய்யான விஷயங்களுக்கு வாய்ப்பளிக்கக் கூடாது. இவற்றுக்குப் பதில் சொல்வதும் பொய்யானது, ஊடகங்களில் விளம்பரம் பெறுவதற்காக இப்படிச் செய்கிறார்கள் என்றார்.

## நெருக்கடியை வென்ற இரண்டு வருடப் பணிகள்

**27 இலட்சம் மக்களுக்கு 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தை ஆரம்பித்தது**



நாட்டின் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்து, ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு வருவதற்காகக் கடந்த இரண்டு வருடங்களில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிறப்பான பணிகளை ஆற்றினார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அம்சங்களிலும் வீழ்ச்சியடைந்திருந்த எமது நாட்டின் பொருளாதாரத்தை மாத்திரமன்றி,

தொடர்ச்சி P2

## "குப்பைகளை சேர்க்க முயற்சி"



தற்போதய அரசியல் மிகவும் தீவிரமான பாசறைகளாக மாறியிருக்கின்றது என்று தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க, குப்பைகளை சேர்க்கவே முயற்சி செய்கின்றனர் என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில், ஞாயிற்றுக்கிழமை

தொடர்ச்சி P2



## வரிக்கு மேல் வரியை சுமத்தி வருகின்றனர்

குறிப்பிட்ட ஒரு செல்வந்த வர்க்கத்தினை பாதுகாக்கின்ற பொருளாதாரம் முறை ஒன்றே தற்போது நாட்டில் காணப்படுகின்றது. IMF ஒப்பந்தம் மூலமும் தொழிலாளர் வர்க்கத்தின் ETF, EPF பணங்களை கொள்ளையடித்து முதல் தர பணக்காரர்களை பாதுகாத்து வரும் ஆட்சியே நாட்டில் காணப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அர்ப்பணிப்புடன் செயல்படுவதாக இருந்தால் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களே முதலில் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். நாட்டின் தலைவரே அதிகபட்ச அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். மக்களின் மீது வரிச் சுமையைச் சுமத்திக் கொண்டு செல்கின்றார். IMF குறிப்பிட்டதால்தான் அப்படிச் செய்கிறோம் என்பதைப் பதிலாக ஜனாதிபதி குறிப்பிட்டாலும் அது மக்களை ஏமாற்றுகின்ற கருத்தாகும். IMF ஒப்பந்தத்தில் அவ்வாறான ஒரு விடயமும்

தொடர்ச்சி P2



## அளுத்கம விகாரையில் நாமல்

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ, ஞாயிற்றுக்கிழமை(18) இரவு அளுத்கம வரலாற்று கந்த விகாரையில் வழிபாடு செய்தார். விபுலாசர தேரரை தரிசித்த பின்னர் ஆலய முதல்வர் கொக்கவிட்டவிடம் ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிக்காக

## "90% வேட்பாளர்கள் போட்டியிடவில்லை"

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் 90 சத வீதமானவர்கள் வெற்றிக்காக போட்டியிடாமல் வேறு தனிப்பட்ட இலக்குகள் மற்றும் நம்பிக்கைகளுக்காக போட்டியிடுவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கூறுகின்றன.

தூதுவர் பதவிகள் உள்ளிட்ட இராஜதந்திரப் பதவிகளைப் பெறுதல், வெளிநாட்டுப் பயணங்களின் போது, அதிக அங்கீகாரம் பெறுதல், ஆளுநர் பதவி, மாநகராட்சித் தலைவர் பதவிகள் உள்ளிட்ட பல்வேறு பதவிகளைப் பெறுதல், அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிட பொதுத் தளத்தைத் தயார் செய்தல், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் நுட்பமாக நுழைந்து

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 14 நாள் அவகாசம்

நிலைப்பாடு வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஆகும். மூன்று பிரதான வேட்பாளர்களுடனும் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாகவும், பேசிய விடயங்களையும் கூட்டத்தில் தெரியப்படுத்தினோம். சில முன்னேற்றகரமான கருத்துக்களை அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அவர்களது தேர்தல் அறிக்கை வெளிவந்த பின்னரே எமது இறுதி முடிவு எடுக்கப்படும்.

என்னுடைய வீட்டிற்கு வந்து நாமல் ராஜபக்ஷ, சந்தித்து இருந்தார். அவர்களிடம் உள்ள விடயங்களைத் தெரியப்படுத்தினார். அது அதி தீவிர சிங்கள வாக்குகளைப் பெற்றுக் கொள்வதை நோக்கமாகக் கொண்டிருந்தது. அதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் கலந்துரையாடியிருந்தோம். தற்போது தெற்கில் சிங்கள பௌத்த பேரினவாதம் தலைத் தூக்காமல் உள்ளது. அது தொடர்பில் கலந்துரையாடினோம்.

எமது மக்களை வழிகாட்டுவதற்காக நாங்கள் ஆவணம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளோம். அதற்கான சிறு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. தெளிவாக மக்களை வழிப்படுத்தற்காகத் தேர்தலுக்கு முன்பாக நாங்கள் ஆவணம் ஒன்றைத் தெளிவாக வழங்கவுள்ளோம்.

தமிழ் பொது வேட்பாளராக வர்ணிக்கப்பட்டுள்ள அரியநேந்திரன் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது. சென்ற கூட்டத் தீர்மானத்தின் படி விளக்கம் கோரி இரண்டு வார கால அவகாசம் கொடுத்து அவருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்குரிய பதில் கிடைத்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுப்போம். அதுவரைக்கும் எமது கட்சியின் எந்தக் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்ள மாட்டார். அந்தப் பின்னணியில் எதிர்வரும் நாட்களில் இடம்பெறும் பிரசாரக் கூட்டங்கள் தொடர்பில் கேள்விகள் எழுந்துள்ளது. கட்சி இது சம்பந்தமாக எமது ஆதரவாளர்களுக்குக் கொடுக்கும் அறிவுரை என்னவென்றால் ஒருவரிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளோம். இதனால் மேடைகளில் ஏறி ஆதரித்துப் பேசும் போது, அவதானமாக இருக்குமாறு கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கின்றோம். எமது கட்சி இது வரை யாருக்கு ஆதரவு வழங்குவது என எந்த தீர்மானத்தையும் எடுக்கவில்லை என குறிப்பிட்டார்.

# 27 அங்குலம் நீளமானது

சம்பந்தப்பட்ட அச்சுப் பணிகளுக்குப் பொருள் தட்டுப்பாடு இல்லை. இன்னும் ஓரிரு நாட்களில் வாக்குச் சீட்டு அச்சடிக்கும் பணி நிறைவடையும் என்றார். வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கும் பணிகள் முடிவடைந்தவுடன் சிறப்பு பாதுகாப்புடன் தேசிய தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசாங்க அச்சகத்திற்கு போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சகத்தின் பிரதானி திருமதி கங்கானி கல்பானி லியனகே மேலும் தெரிவித்தார்.

# "90% வேட்பாளர்கள் போட்டியிடவில்லை"

பதவிகளைப் பெறுதல், ஊடகங்களில் பிரிந்து செல்வது. நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ முக்கிய வேட்பாளர்களை ஆதரிப்பது மற்றும் ஊடகங்கள் மூலம் விளம்பரம் பெறுதல் போன்றவை. இந்த வேட்பாளர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் நோக்கங்களில் ஒன்றாக இருப்பதாகக் கண்காணிப்பு அமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் நோக்கம் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் பதவியைப் பெறுவதற்கு பலம் பெறுவதே என்பது அவரது சொந்தக் கூற்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 39 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் தொழில்முனைவோர், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள் ஆவர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, அதிகளவான வேட்பாளர்கள் இருப்பதால் ஒவ்வொரு வேட்பாளருக்காகவும் கிட்டத்தட்ட இரண்டு கோடி செலவழிக்க நேரிடும் என்றார்.

# "குப்பைகளை சேர்க்க முயற்சி"

(29) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த பாராளுமன்றத்தில் நீண்டகாலமாக அமைச்சுப் பதவிகளை வகித்த அரசாங்கங்களை அமைத்தவர்களே இருக்கிறார்கள். அவர்களின் தேர்தல் இயக்கம் இந்த சிறப்புரிமைகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதாகும். அதாவது இந்த நாட்டை அதலபாதாளத்தில் தள்ளிவிட்ட மோசடிகள் ஊழல்கள் நிறைந்த கலாச்சாரத்தை ஏற்படுத்திய குழுக்கள் பகிர்ந்து கொள்வதிலான மல்லுக்கட்டலில் ஈடுபட்டுள்ளார்கள்.

ரணில் விக்ரமசிங்க ஒரு பகுதியை அபகரித்துக் கொள்ள முயற்சி செய்கிறார். நாமல் ராஜபக்ஷ ஒரு பகுதியை வைத்துக்கொள்ள முயற்சி செய்கிறார். சஜித் பிரேமதாச ஒன்றுசேர்ந்த குப்பை மேடுகளைச் சேர்த்துக் கொள்ள முயற்சி செய்கிறார். அதுதான் அவர்களின் தேர்தல் இயக்கம்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் இயக்கத்திற்கு நாங்கள் நீண்ட காலமாகத் தயாராகி வந்தோம். அதற்காக நாங்கள் பல்வேறு துறைகளைச் சார்ந்த அமைப்புக்களுடன் செயலாற்றி வந்தோம். சட்டத்தரணிகள் குழுக்கள், பொறியியலாளர்கள், கலைஞர்கள், தொழில் வாண்மையாளர்கள் இளைப்பாறிய முப்படை கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள், அதைபோலவே ஏனைய இளைப்பாறியவர்கள், வலது குறைந்தோர், கமக்காரர்கள், மீனவர்கள், இவர்கள் அத்தனைப் பேரையும் நாங்கள் திட்டமிட்ட அடிப்படையில் அணிதிரட்டி வருகிறோம்.

அதனால் மக்கள் பலமே எங்களின் சக்தியாக மாறியிருக்கிறது. அவர்களின் சக்தியாக மாறியிருப்பது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்த அங்குமிங்கு தாவிக்கொண்டிருக்கின்றவர்களை ஒன்று சேர்கின்ற அரசியலாகும். அதனால் தற்போது இந்த அரசியல் போராட்டக் களத்தில் கொள்கைப்பிடிப்புள்ள ஒரே ஒரு அரசியல் பாசறைதான் இருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் அரசியல் பாசறையே அது. ஏனைய அரசியல் பாசறைகள் அனைத்துமே கொள்கை என்னவென்று கண்டுபிடிக்க முடியாத கட்சிகள் எது என அடையாளம் காணமுடியாத அளவிற்கு களைப்படைந்த பாசறைகளாக மாறியுள்ளது.

அதனால் நான் நினைக்கிறேன் இந்த தேர்தல் இயக்கத்தின் இந்த பாசறைகளின் பிரிகையிடலை உற்றுநோக்கினால் தேசிய மக்கள் சக்தியின் பலமான தன்மையும் அவர்களின் பலவீனமான தன்மையும் தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது.

மக்கள் எம்மை நோக்கி பெருந்திரளாக அணிதிரண்டு வந்தார்கள். எங்களுடைய ஒட்டுமொத்த தேர்தல் இயக்கமும் நாட்டுக்கு என்ன நேர்ந்தது? அதாவது இவர்கள் வரலாற்றில் என்ன செய்தார்கள்? தற்போது நாட்டிலுள்ள நிலைமை என்ன? இதிலிருந்து மீட்டெடுப்பதற்கான வழிமுறை என்ன? ஆகிய விடயங்களைத் தெளிவுபடுத்தவும் அதிலிருந்து மீட்டெடுப்பதற்கான வழிமுறைகள் என்னவென்பதையும் அதற்கான மக்களின் இடையீடு பற்றியும் தெளிவுபடுத்துவதும் தான் எமது ஒட்டுமொத்த தேர்தல் இயக்கத்தின் உள்ளடக்கமாகும் என்றார்.

# வரிக்கு மேல் வரியை சுமத்தி வருகின்றனர்



ஒரு விடயமும் குறிப்பிடப்படவில்லை. அரசாங்கம் மக்களை அசௌகரியத்திற்குட்படுத்த முயற்சிக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாவலப்பிடி பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு சீரழிந்து இருக்கின்ற சந்தர்ப்பத்தில் தற்போதைய ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தின் பங்காளர்கள் பொருளாதார செயற்பாடுகளை தமது நண்பர்களிடம் ஒப்படைத்து இருக்கிறார்கள். நாட்டின் விரிவான பொருளாதார வளர்ச்சி ஒன்றை உருவாக்கி அதன் பிரதி பலனை அனைத்து மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கக் கூடிய பொருளாதார யுகம் ஒன்றைக் கட்டியெழுப்புவேன் என்றார்.

அநீதி, திருட்டு, ஊழல் மற்றும் மோசடி என்பன ஆட்சி செய்கின்ற இந்த காலத்தில் சாதாரண சமூகம் ஒன்றில் நீதி நியாயம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்பட்டு, அனைவருக்கும் பொதுவான பொருளாதாரப் பிரதிபலனைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆட்சி யுகம் ஒன்றை ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதுள்ள பொருளாதாரக் கொள்கையினால் நாட்டில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் ஏழைகளாக மாறியிருக்கிறார்கள். அந்த ஏழ்மையை போக்குவதற்காக ஜனசவிய திட்டத்தை விட வலு உள்ள திட்டங்களை ஐக்கிய மக்கள் சக்தி நடைமுறைப்படுத்தும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

# நட்சத்திர ஹோட்டலில் தோட்டா

கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் நுழைவாயிலுக்கு அருகில் உயிருள்ள தோட்டா ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

9 மி.மீ ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் உயிருள்ள தோட்டா ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஹோட்டல் வளாகத்தைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் நுழைவாயிலுக்கு அருகில் உள்ள அரலிய மரத்திற்கு அருகில் உள்ள சுவரின் அடிப்பகுதியைச் சுத்தம் செய்து கொண்டிருந்த போதே இந்த தோட்டா சிக்கியுள்ளது.

பிரமுகர்கள் ஹோட்டலில் வந்து தங்கியிருந்த நிலையில், பாதுகாப்பு அதிகாரிகள் இருந்த இடத்திலேயே இந்த தோட்டா கிடந்துள்ளது என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்தார்.

# "ஹரின், மனுஷ நியமனம்: சட்டங்களை மீறும் செயல்"

அகில விராஜ், சாகல ரத்நாயக்க, ஆஷு மாரசிங்க போன்ற ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு ஆலோசகர்கள் பதவிகள் வழங்கப்பட்டு, நவீன் திஸாநாயக்க ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள அரச நிதியினால் முழு ஐ.தே.க முகாமும் மகிழ்விக்கப்படுவதாக அவர் கூறினார்.

ஜனாதிபதி தேர்தல் சட்டங்களை மீறி அரச வளங்கள் மற்றும் நிதியைத் தனது தேர்தல் பிரசாரத்திற்காக தவறாகப் பயன்படுத்துவதாகவும், தேர்தல் ஆணைக்குழுவால் அதனைத் தடுக்க முடியவில்லை எனவும் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# நெருக்கடியை வென்ற இரண்டு வருடப் பணிகள்

ஸ்திரத்தன்மை மற்றும் முன்னேற்றத்திற்கு அவசியமான அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய வகையில் ஜனாதிபதியின் வேலைத்திட்டங்கள் அமைந்திருந்தன.

பொருளாதார பரிமாற்றச் சட்டத்தை நிறைவேற்றி, வரலாற்றில் முதல்முறையாக, தேசியத் திட்டம், இலக்குமயப்பட்ட வேலைத் திட்டம் மற்றும் பொறுப்புக் கூறல் ஆகியவற்றிற்குள் ஆட்சி நடைபெறும் சூழலை உருவாக்குதல், அரச நிதி முகாமைத்துவ சட்டத்தினை நிறைவேற்றியதன் மூலம் நாட்டில் முறையான நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்துதல், 83 புதிய சட்டங்கள் மற்றும் சட்ட வரைவுகளை நிறைவேற்றுவதற்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து இந்நாட்டிற்குத் தேவையான சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

, ஊழலை ஒழிப்பதற்காக, சர்வதேச தரத்துடன் கூடிய ஆசியாவிலேயே மிகவும் சக்திவாய்ந்த ஊழல் எதிர்ப்பு சட்டத்தை அறிமுகப்படுத்தல், இந்நாட்டின் 20 இலட்சம் பேருக்கு முழு உரிமையுள்ள காணி உறுதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் குறைந்த வருமானம் பெறும் நகர்ப்புற அடுக்குமாடி குடியிருப்பாளர்களுக்கு அந்த வீடுகளின் உரிமையை வழங்குதல், சமுர்த்தியை விட மூன்று மடங்கு நிதி ஒதுக்கீடுகளைச் செய்து, பொருளாதார நெருக்கடியினால் மிகவும் பாதிக்கப்பட்ட 27 இலட்சம் மக்களுக்கு 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தை ஆரம்பித்தல், பொருளாதார டிஜிட்டல் மயமாக்கல் அவற்றில் முக்கியமானவையாகும்.

மேலும், பெண்களை வலுவூட்டும் சட்டத்தின் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதோடு, புதிய கல்வி சீர்திருத்தங்களை மேற்கொள்ளல், விவசாய நவீனமயமாக்கல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக அதிகளவு நிதியைப் பயன்படுத்தல் உட்பட தேசிய ஒருமைப்பாட்டுக்கான பல்வேறு வேலைத் திட்டங்களைச் செயல்படுத்துதல், பெருந்தோட்ட மக்களின் நாளாந்த சம்பளத்தை அதிகரித்தல் மற்றும் வீட்டு உரிமைகள் வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்பட்டது.

மருந்துப் பற்றாக்குறையை முடிவுக்குக் கொண்டு வந்து மருத்துவமனை சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் வீழ்ச்சியடைந்திருந்த சுகாதாரத் துறையை மீண்டும் வலுப்படுத்தல், வலுசக்தி நெருக்கடியைத் தீர்த்து, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் கவனம் செலுத்தும் பல திட்டங்களை உருவாக்குதல், காலநிலை மாற்றம் தொடர்பான கருத்தாடலை சர்வதேச அளவில் கொண்டு செல்வது உட்பட அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவதற்காக வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் செயற்படுத்தாத மாபெரும் பணிகளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சி, கடந்த இரண்டு வருடங்களில் நிறைவேற்றியுள்ளது.

# "நாட்டுக்கு பொருத்தமான ஜனாதிபதி ரணில்"

நூருல் ஹுதா உமர்

உலகின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை எப்போதே கட்டியெழுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனாலும், துரதிருஷ்டவசமாகக் கடந்த கால ஆட்சியாளர்களினால் அந்த வாய்ப்பு தவறவிடப்பட்டுள்ளது. இருந்த போதிலும் பொருளாதார பேரழிவைச் சந்தித்து படுகுழியில் விழுந்திருந்த எமது நாட்டை இரண்டே வருடங்களில் மீட்ட ஜனாதிபதி ரணிலை நாம் பலப்படுத்தி நாட்டை தலைசிறந்த நாடாக முன்னேற்றவே எங்களின் கட்சி ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணிலை ஆதரிக்க தீர்மானித்தது என்று ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் தலைவர் கலாநிதி அன்வர் எம்.முஸ்தபா தெரிவித்தார்.


ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி தலைமையகத்தில் ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அங்குக் கருத்து வெளியிட்ட அவர்,

நாடு பொருளாதார பின்னடைவைச் சந்தித்து வங்குரோத்து நிலைக்குச் சென்று கொண்டிருந்த போது, இப்போது நாட்டை ஆட்சி செய்யக் கேட்கும் சஜித் பிரேமதாச, அனுரகுமார, நாமல் போன்றோர்கள் தலையைக் காப்பாற்றத் தப்பி ஓடிய போது தேசிய பட்டியல் எம்.பியாக பாராளுமன்றம் நுழைந்த ரணில் விக்ரமசிங்க அவர்கள் தைரியமாக முன்வந்து நாட்டை பொறுப்பேற்றார். அதுமட்டுமின்றி, இரண்டே ஆண்டுகளில் இலங்கையை அந்த நிலையிலிருந்து மீட்டும் காட்டினார்.

பெற்றோலுக்கும், டீசலுக்கும், மருந்துக்கும், பால்மாவுக்கும், எரிவாயுக்கும் நாள் கணக்கில் வெயிலிலும், மழையிலும் பட்டினியோடு தவமிருந்த இலங்கையர்களை வீட்டில் நிம்மதியாகத் தூங்க வைத்த பெருமை ஜனாதிபதி ரணிலையே சாரும். வர்த்தகர்கள், பொருளாதார சிதைவினால் இன்னலுற்றபோது, டொலரை ஒரு நிலையான இடத்தில் ரணிலின் அனுபவ முதிர்ச்சி அரசியல் நிலைநிறுத்தியதை நாம் மறந்து விட முடியாது. கொரோனாவால் பாதிக்கப்பட்டு வீழ்ந்த நாடுகளில் விரைவாக எழுந்த நாடாக இலங்கை மிளிர காரணம் ரணிலின் அரசியல் முதிர்ச்சியும், சர்வதேச அரசியலின் அனுபவமும், திறமையுமே.

மக்கள் செல்வாக்கு நிறைந்த 100க்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களையும், இலங்கையின் அதிக அரசியல் கட்சிகளையும், அதிகூடிய இலங்கையர்களின் நன்மதிப்பையும் பெற்ற ஜனாதிபதி மக்களுக்குக் கஷ்டம் என்றவுடன் எவ்வாறு முன்வந்து தீர்வை கண்டரோ அதே போன்று மக்களுக்கும் ரணிலை ஜனாதிபதியாக மீண்டும் ஆட்சி பீடம் ஏற்ற தயாராகி விட்டார்கள். உணர்ச்சிவசப்படுத்தும் பேச்சுக்களுக்கு மக்கள் அடிபணியாமல் நாட்டில் மீண்டும் அரகல ஒன்றைத் தவிர்க்கும் விதமாகப் பெரும்பான்மை வாக்குகளுடன் ஜனாதிபதி ரணிலை ஆதரிப்பார்கள்.

பெரும்பான்மை சிங்கள மக்களினது மட்டுமல்ல தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ, மலையக மக்களின் அதி கூடிய வாக்கும் ரணிலுக்கே உள்ளது என்பதைச் செப்டெம்பர் 22 இந்த நாடு தெரிந்து கொள்ளும் என்றார். இந்த ஊடக சந்திப்பில் ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி தவிசாளர் பொறியியலாளர் என்.ரீ.எம். சிராஜுதீன், செயலாளர் எம்.பி. எம்.நிஹாப் உட்பட செயற்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.







# நல்லூர் கந்தனின் திருமஞ்சத் திருவிழா

வரலாற்று சிறப்புமிக்க யாழ். நல்லயம்பதி அலங்கார கந்தன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தின் திருமஞ்சத் திருவிழா, ஞாயிற்றுக்கிழமை (18) பக்திபூர்வமாக இடம்பெற்றது.
கருவறையில் வீற்றிருக்கும் அலங்கார வேலனுக்கு விஷேட, அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று வசந்த மண்டபத்தில் அருள்பாலிக்கும் முருகன், வள்ளி, தெய்வானைக்கு விஷேட அபிஷேக, ஆராதனைகள் நடைபெற்றது.
பின்னர் முருகப்பெருமான் எழுந்தருளியாக திருமஞ்சத்தில் வீற்று, வள்ளி, தெய்வானையுடன் உள்வீதி, வெளிவீதியூடாக வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.
இந்த மஹோற்சவ கிரியைகளை ஆலயபிரதம சிவஸ்ரீ வைகுந்தன் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியர்கள் நடத்தி வைத்தனர்.
பல இடங்களிலும் இருந்து வருகைதந்த பக்தர்கள் வழிபாடுகளில் கலந்துகொண்டு முருகப் பெருமானிடம் இஷ்ட சித்திகளை பெற்றுச் சென்றனர்.


புகஜிந்தன்











தொழுநோயில் இருந்து

# “தற்காத்துக் கொள்வோம்”

■ பு.கஜிந்தன்

காலநிலை மாற்றத்திற்கூடாக உடல், உள ரீதியான தாக்கங்கள் எவ்விதமாக இருக்கிறது என்பதற்கான ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல் ஒன்று ஞாயிற்றுக்கிழமை (18) நடத்தப்பட்டது.

மாவட்ட ஹொக்கி அணியுடன் இணைந்து இந்த விழிப்புணர்வு நிகழ்வை காவேரி கலா மன்றம் ஒழுங்குபடுத்தி நடத்தியது.

விளையாட்டு வீரர்கள் உடல் ஆரோக்கியம் தொடர்பான விடயத்தை சமூகத்தில் இருப்பவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பது மிகச் சிறப்பான விடயம். எனினும், விளையாட்டு வீரர்கள் சூழலியல் பார்வையில் அக்கறை உள்ளவர்களாக இருப்பதன் ஊடாக எவ்விதமாக உடல் ஆரோக்கியம் மிக்க ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதைக் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இந்த செயற்பாட்டினை காவேரி கலா மன்றம் அறிமுகப்படுத்தியது.

அந்த வகையில், காவேரி கலா மன்றம், இந்த ஆகஸ்ட் மாதத்தில் காலநிலை மாற்றம் உடல் உள ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக யாழ். மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஹொக்கி அணியினரோடு இணைந்து இந்த ஹொக்கி விளையாட்டுப் போட்டியை வைப்பதற்கூடாக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தத் தீர்மானித்தது.

இதனூடாக சமூகத்தில் பல்வேறு நிலைகளில் இருக்கக்கூடிய சமூக மட்ட அமைப்புகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பி, சூழலியல் சார்ந்த விடயங்களில் அதிகமான பங்களிப்புகளை நாம் கொடுக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளது.

குறிப்பாக ஓர் விளையாட்டு வீரர் விளையாட்டு வீரராக மட்டும் அல்லாமல் தனது நாளாந்த செயற்பாடுகளில் எவ்விதமாக சூழலியல் மேம்பாட்டுக்குப் பங்களிப்பைச் செய்யக்கூடும், நடந்து செல்லக்கூடிய இடங்களுக்கு நடந்து செல்கின்ற பொழுது அல்லது சைக்கிளில் செல்கின்ற பொழுது ஒரு விளையாட்டு வீரனாகச் சூழல் மேம்பாட்டுக்குத் தனது பங்களிப்பைக் கொடுக்கின்றான் அவ்விதமாகத் தொற்றும், தொற்றா நோய்கள் குறித்த விழிப்புணர்வைத் தனது குடும்பத்திலும் தனது விளையாட்டு கழகத்துள்ளும் தனது சமூகத்துக்குள்ளும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிற மிகச் சிறந்த ஒரு சமூக விழிப்புணர்வை முன் கொண்டு செல்கின்ற ஓர் ஊடகமாகத் திகழும். இதை அடிப்படையாகக் கொண்டு காவேரி கலா மன்றம் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.





குறிப்பாகத் தொற்று நோய்களில் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு நோய்கள் தற்போது எமது பிரதேசத்தில் இருக்கிறது. அந்த நோய்களிலிருந்து நாம் விடுபடுவது சமூக மட்டத்தில் விளையாட்டு வீரர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவர்.

குறிப்பாகத் தொழுநோயினால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றபடியால் அவைகளில் இருந்து நாம் தற்காத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வைப் பெறுவதற்கான ஒரு ஊக்கத்தையும் இந்த செயற்பாடுகள் கொடுக்கும் என்ற நோக்கத்தில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இதில் விருந்தினர்கள், துறைசார் வைத்திய நிபுணர்கள், தொழு நோயாளர் மறு வாழ்வுக்கான சங்கத்தினர், காவேரி கலா மன்றத்தினர், யாழ்ப்பாண மாவட்ட ஹொக்கி அணியினர் என பலர் கலந்து கொண்டனர்.

## திருவிழாவில் கைவரிசை

■ எம்.றொசாந்த்

யாழ். தொண்டமானாறு பகுதியில் அமைந்துள்ள செல்வ சந்நிதி முருகன் ஆலயத்தின் ஞாயிற்றுக்கிழமை (18) நடைபெற்ற வருடாந்திர தேர்த் திருவிழாவின்போது, சுமார் 35 பவுன் நகை அபகரிக்கப்பட்டுள்ளது.

செல்வ சந்நிதி முருகன் ஆலய வருடாந்திர தேர் திருவிழாவுக்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும், பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தேர்த் திருவிழாவை நேரில் கண்டு களித்துள்ளனர். இந்த நிலையில், ஆலய சூழல்களில் சன நெரிசல்களைப் பயன்படுத்தி திருடர்கள் தன் கைவரிசையைக் காட்டியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பல பக்தர்களின் பெறுமதியான தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன. தமக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் சுமார் 35 பவுன் நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நோர்வூட்டைசேர்ந்தவர் மெனிக்கேவுக்கு பலி

கொழும்பு கோட்டையில் இருந்து திங்கட்கிழமை (19) பதுளையை நோக்கி சென்ற ரயிலில் மோதி நோர்வூட்டைச் சேர்ந்த 35 வயதுடையவர் மரணமடைந்துள்ளார்.

றொசெல்லவுக்கும் வட்டவளைக்கும் இடையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில், மரண பரிசோதனைக்காக டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

## அழகுக்கலை நிபுணர்களின் ‘சோழன் உலக சாதனை’

■ செ.தி.பெருமாள்



கொழும்பில் இயங்கி வரும் ‘அஸ்மா பிரைடல் அகாடமி பிரைவேட் லிமிடெட்’ சார்பாக இந்த சோழன் உலக சாதனை படைக்கும் நிகழ்வானது கொழும்பு ‘கிங்ஸ் ஹாலில்’ ஞாயிற்றுக்கிழமை(18) நடைபெற்றது.

இதில் இலங்கையின் பல மாவட்டங்களைச் சேர்ந்த 60 அழகுக்கலை நிபுணர்கள் நேரடியாக பங்கு கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தியதுடன், இந்தியா, மலேசியா போன்ற நாடுகளைச் சேர்ந்த மேலும் 70 அழகுக்கலை நிபுணர்கள் இயங்கலையூடாக பங்கு கொண்டார்கள்.

இந்த சோழன் உலக சாதனை படைக்கும் முயற்சியின் போது, மணப் பெண் முக அலங்காரம், ‘ஐ மேக் அப்’, ‘சாரி வேர்க்’, ‘கேக் தயாரிப்பு’, ‘கோஸ்மெடிக் அப்ளிகேஷன்ஸ்’, ‘மெஹந்தி ஆர்ட்’, ‘ஆர்ட் கிராப்ட்’, ‘எம்பிரைடிங்’, ‘ஃபேஷன் டிசைனிங்’ மற்றும் ‘கைவினைப் பொருள்’ தயாரிப்பு போன்றவற்றை 20 நிமிடங்களில் செய்து முடித்து சோழன் உலக சாதனை படைத்தனர்.

இந்த உலக சாதனை நிகழ்வு, சோழன் உலக சாதனை புத்தக நிறுவனம், ‘பீபுல் ஹொல்பிங் பீபல் பவுண்டேஷன்’ மற்றும் ‘அஸ்மா பிரைடல் அகாடமி பிரைவேட் லிமிடெட்’ போன்ற அமைப்புகள் இணைந்து நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரயிலுடன் லொறி மோதியதில் ஒருவர் பலி

கொஸ்கொட இடுருவா பகுதியில் திங்கட்கிழமை (19) பிற்பகல் லொறி ஒன்று ரயிலுடன் மோதியதில் அதில் பயணித்த இருவரில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றையவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த 55 வயதுடைய நபரும், காயமடைந்த நபரும் இதுருவ, மஹா இதுருவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கொஸ்கொடவில் இருந்து விறகு ஏற்றிச் சென்ற லொறி, காலியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதியே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




## அறிவித்தல்

### டால் லங்கா ஹோட்டல்ஸ் பி.எல்.சி (PQ183)
### 44 வது வருடாந்த பொது கூட்டம்

டால் லங்கா ஹோட்டல்ஸ் பி.எல்.சி (“டால்”) நாற்பத்தி நான்காவது (44) வருடாந்த பொதுக் கூட்டம் (“AGM”) 2024 செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலை 11.30 மணிக்கு மெய்நிகர் தளம் மூலம் ஆன்லைனில் நடைபெறும் என்பதை இதன்மூலம் அறிவிக்கிறோம். 2024 ஆகஸ்ட் மாதம் 20 திகதி இக் கூட்டத்தின் அறிவிப்பின் மூலம் கருதப்படும் வணிக பரிவர்த்தனைகளை மேற் கொள்வதற்காக.

இக் கலந்துறையாடல் மற்றும் நிகழ்ச்சி நிரல் பற்றிய விரிவான அறிவிப்புக்கு, Proxy மற்றும் பதிவுப் படிவத்துடன் அறிவிப்பு மற்றும் விரிவான தகவலுக்கு, கொழும்பு பங்குச் சந்தையின் இணையதளத்தைப் பார்வையிடவும்: (https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=TAJ.N000) மற்றும் நிறுவனத்தின் இணையதளம் (https://www.tajhotels.com/en-in/hotels/taj-samudra-colombo).

கூட்டத்தில் பங்கேற்க விரும்பும் பங்குதாரர்கள், மேற்கூறிய இணையதளங்களில் உள்ள பதிவுப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்யது நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு deepa.perera@tajhotels.com அல்லது orcorporateservices@corporateservices.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கூட்டத்தை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட நேரத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**டால் லங்கா ஹோட்டல்ஸ் பி.எல்.சி வாரியத்தின் உத்தரவின்படி**
கார்ப்பரேட் சர்வீசஸ் (தனியார்) லிமிடெட் இன் செயலாளர்கள்
2024 ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி

# பிரிவினையை தூண்டும் பிரசாரங்களை தவிர்ப்பதே சிறந்தது

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடித்துள்ளது. மொத்தமான 40 பேர் கட்டுப்பணம் செலுத்தி இருந்த நிலையில், 39 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். இதில், பிரதானமாக நான்கு வேட்பாளர்கள் மட்டுமே, தேர்தல் பிரசாரங்களில் குதித்துள்ளனர். ஏனையோர், மிகப் பிரமாண்டமான முறையில் எவ்விதமான பிரச்சாரங்களிலும் இதுவரையிலும் ஈடுபடவில்லை.

பல மதங்களைச் சேர்ந்த வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடும் வேட்பாளர்கள், தேர்தல் பிரசாரக் காரியங்களைத் திறக்கும் செயற்பாடுகளில் தீவிரமாக இறங்கியுள்ளனர். இந்நிலையில், தேசியக் கொடிகளையும், மத சின்னங்களையும் தேர்தல் பிரச்சாரங்களில் பயன்படுத்த வேண்டாம் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுரை வழங்கியுள்ளது. இவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என நாமும் நினைவூட்டுகிறோம்.

தேர்தல் பிரசாரங்களில் குதித்துள்ள முன்னணி வேட்பாளர்களான சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தங்களுடைய கொள்கை திட்டங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிவித்து வருகின்றனர்.

அதில், நான் ஜனாதிபதியானால், "நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பேன்" என்பதாகும். இது இந்தத் தேர்தலுக்கான தொனிப்பொருள் அல்ல, கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது, சகல வேட்பாளர்களாலும் வழங்கப்பட்ட மிக முக்கியமான உறுதி மொழிகளில் ஒன்றாகும். ஆனால், அதை எவரும் நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கவில்லை. அடுத்ததாகத் தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், நிறைவேற்று அதிகாரத்தை அனுபவிக்க முடியாது போய்விடுமோ என்ற அச்சத்திலேயே பலரும் அந்த ஆயுதத்தைக் கையெடுத்துப் பார்க்கவில்லை எனலாம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட எட்டாவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலின் போது, இனவாதமே தலைத்தூங்கியிருந்தது. பிரதான வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷ, வடக்கு கிழக்கு தேர்தல் பிரசாரத்துக்குச் செல்லவில்லை. பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டினேன் என்று புகழ்ந்து கொண்ட அவர், சிறுபான்மையின மக்கள் தொடர்பில் எவ்விதமான கரிசனையும் காண்பிக்கவில்லை. சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை எனக் கூறினால் அது சரி.

அவரது அணியில் பிரச்சார பீரங்கிகளாக இருந்தவர்களில் பாராளுமன்ற உறுப்பினர்களான உதய கம்பன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகியோரை குறிப்பிடலாம். அவ்விருவரும், யாழ்ப்பாணத்திற்குச் சென்று, நல்லூரில் மேற்சட்டை இல்லாமல் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இதனை ஒரு மாற்றமாகக் கருதவேண்டும். அந்த மாற்றம் ஒவ்வோரிடமும் வந்தால், நாடு முன்னேறும், தேர்தல் பிரசாரத்தில் பிரிவினைவாதமும் இருக்காது.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136



Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




முஸ்லிம் சமூகம்

# மந்திரித்து விடப்பட்ட ஆடுகளா?

மொஹமட் பாதுஷா

ஒரு தேர்தலில் குறிப்பிட்ட ஒரு சமூகம் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவை பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்க முடியும். பதவியையும் பணத்தையும் தமது அரசியல் இருப்பையும் பற்றிச் சிந்திக்காமல் சமூக நலனை முன்னிறுத்திச் செயற்படுகின்ற அரசியல் கட்சிகள் ஏதுமிருப்பின், அவர்களும் இது விடயத்தில் மிகக் கவனமாகச் செயல்பட வேண்டியுள்ளது.

குறிப்பாக முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை, கடந்த கால அனுபவங்களை, பாடங்களை அடிப்படையாகக் கொண்டு முடிவெடுக்கலாம். சமூகம் சார்ந்த உடன்பாடுகள் அடிப்படையில் ஆதரவளிக்கலாம். 'எல்லா முட்டைகளும் ஒரே கூடையில் இருப்பது பாதுகாப்பானதல்ல' என்ற கோணத்தில் சிந்தித்து ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு முஸ்லிம்கள் தமது ஆதரவை அளிக்கலாம்.

முஸ்லிம் சமூகத்திற்கு இதுவும் ஒரு முக்கியமான தேர்தலாகும். இதற்கு முன்னைய காலங்களில் 'இவர் இனவாதி', 'முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்தவர்' அல்லது 'கடும்போக்காளர்' என முத்திரை குத்தக் கூடிய வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். அதனால் ஒருவரை வெளிப்படையாகவே புறக்கணிக்கக் காரணம் இருந்தது.

2024 ஜனாதிபதித் தேர்தல் களம் அப்படி அமையவில்லை. பிரதான வேட்பாளர்களான மூவரையும் அப்படி முத்திரை குத்திவிட முடியாத நிலை உள்ளது. எனவே, முஸ்லிம் கட்சிகள் என்ன முடிவை எடுத்தாலும், முஸ்லிம் சமூகமானது தாங்கள் யாரை ஆதரிக்க வேண்டும். என்ற இறுதித் தீர்மானத்தை சுயமாகச் சிந்தித்தே எடுக்க வேண்டும்

தமிழர் அரசியல் உண்மையாகவே வடக்கு, கிழக்கிலும் சரி கொழும்பிலும் சரி மலையகத்திலும் சரி இறங்குமுகமாக இருக்கிறது. நடிகைகளைக் கூட்டி வந்து படம் காட்டியது போல, மலையக அரசியல் மாயைகளுக்குப் பின்னால் மக்களை இழுத்துச் செல்கின்றது. கொழும்பு தமிழர் அரசியலோ முஸ்லிம் அரசியலோ இன்னும் 'சேரி' வாழ்க்கைக்குக் கூட முடிவு கட்டவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இம்முறை தேர்தலில் தமிழர்கள் மிகவும் பிளவுபட்டுள்ளனர். பொது வேட்பாளர், தேர்தலைப் புறக்கணித்தல், பெருந்தேசிய வேட்பாளர்களுடன் இணங்கிப் போவது என்ற கோட்பாடுகளின் அடிப்படையில், பல துண்டங்களாக வாக்குகள் பிளவுபடப் போகின்றன. இதனால் தமிழர் அரசியல் இன்னும் பலவீனமடையும் சாத்தியமுள்ளது.

ஆகவே, இந்த முறை முஸ்லிம் மக்களின் வாக்குகள் அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிப்பதில் கணிசமான பங்கை வகிக்கப் போகின்றன என்பது தொட்ட தெளிவாகப் புலப்படுகின்ற விடயமாகும். எனவே தீர்க்கமான, தீர்க்கதரிசனமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

அதைவிடுத்து, சொந்த இலாபங்களின் அடிப்படையில் முஸ்லிம் அணிகள் முடிவெடுக்குமாயின், ஒரு கட்சி எடுக்கின்ற முடிவுகளை அதன் எம்.பிக்கள் புறக்கணித்து பல்டி அடிப்பார்களாயின், மக்களை எப்படி நிலையாக வைத்திருக்க முடியும்? அல்லது மக்கள் என்ன பயன் கிடைத்து விடப் போகிறது?

அந்த வகையில், முஸ்லிம் சமூகத்தைச் சரியாக வழிப்படுத்துவதற்கான அருகதையை, கடந்த கால வரலாற்றுப் பதிவுகளை முஸ்லிம் கட்சித் தலைவர்களும், எம்.பிக்களும் கொண்டிருக்கின்றார்களா என்று மீள் வாசிப்பொன்றைச் செய்ய வேண்டிய தேவையும் உள்ளது.

இங்கு ஒரு முக்கிய விடயத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது, ஆளும் தரப்பில் இருப்பதன் மூலம் சிறுபான்மைச் சமூகங்கள் ஒப்பீட்டளவில் சில நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை ஏற்றுக்கொள்ளக் கூடிய தர்க்கமே என்றாலும். வெற்றி பெறுகின்ற பக்கம் நாம் நிற்க வேண்டும் என்ற மனப்பாங்கு கொள்கையில்லாத அரசியலின் அடையாளமாகும்.

ஒரு தேர்தலில் யார் வெற்றி பெற வேண்டும் என்று ஒரு விடயம் இருக்கின்றது. யார் வெற்றி பெறும் சாத்தியமுள்ளது என்று இன்னும் ஒரு விவகாரம் இருக்கின்றது. ஆனால், ஜனநாயக வழிமுறை என்பது நாம் இந்த நாட்டின் ஜனாதிபதியாக யார் வர வேண்டும் என்று கருதுகின்றோமோ அவருக்கு வாக்களிப்பதாகவே இருக்கும்.

நமது கொள்கை என்பது நமது சமூகத்திற்கு, நாட்டுக்குப் பொருத்தமான வேட்பாளருக்கு வாக்களிப்பதாக இருக்க வேண்டும். யார் ஜனாதிபதியாக வரக்கூடும் என்ற அடிப்படையில் வெற்றி பெறுபவரின் அணியில் நாமும் இருக்க வேண்டும் என்று எண்ணி வாக்களிக்கும் மனநிலைக்குள் மக்களை முஸ்லிம் கட்சிகள் தள்ளிவிடக்கூடாது.

அதேவேளை, இவர்தான் சரியான, பொருத்தமான ஜனாதிபதி, இவர்தான் நிச்சயம் வெற்றி பெறுவார். இவர்தான் முஸ்லிம்களுக்குச் சாதகமானவராக இருப்பார், எனவே, இவருக்குத்தான் நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்வதற்கு முஸ்லிம் கட்சிகள், தலைவர்கள், எம்.பிக்கள் யாருக்குமே எந்த அருகையும் இருக்கின்றதா என்ற வினாவும் இவ்விடத்தில் எழுகின்றது.

கடந்த கால் நூற்றாண்டு அரசியலில் முஸ்லிம் அரசியல்வாதிகள் முன் கணித்த என்ன விடயங்கள் நடந்திருக்கின்றன? இவர்தான் பொருத்தமான, சாதகமான ஆட்சியாளர் என்று நீங்கள் வாக்களித்தவர்கள் வெற்றி பெற்றார்களா? நீங்கள் தேர்தலுக்குப் பின்னர் அந்தப் பக்கம் தாவி பதவி, பணத்தைப் பெற்றுக் கொண்டீர்கள் என்பது உண்மையா அல்லது மக்களுக்குப் பிரதிபலன்களைப் பெறுக் கொடுத்தீர்கள் என்பது உண்மையா?

> **தகுதியற்ற அரசியல் தலைவர்கள், முன்னாள், இந்நாள் எம்.பிக்கள் முடிவெடுப்பதற்கான பொறுப்பை சமூகத்தின் கையில் கொடுத்துவிட்டு, உங்களது சொந்தக் கூடாரங்களுக்கு ஒதுங்கிக் கொள்ளலாம்.**
> **ஏனென்றால், சுயநல தலைவர்கள், எம்,பிக்களுக்கு பின்னால் மந்திரித்து விடப்பட்ட ஆடுகளைப் போல முஸ்லிம் சமூகம் இனியும் செல்ல முடியாது**

முஸ்லிம் அரசியல்வாதிகள் சமூகத்திற்கான அரசியலைச் செய்கின்றார்களா தத்தமது அரசியல் சார்ந்த வாழ்வாதாரத்திற்கான அரசியலைச் செய்து கொண்டிருக்கின்றார்களா என்பது ரகசியமான விடயமல்ல.

இதற்கு முன்னர் கூடவிட்டுக் கூடு பாய்ந்த முஸ்லிம் கட்சிகள், எம்.பி. பதவியை எடுத்துக் கொண்டு பல்டி அடித்த அரசியல்வாதிகள் தொடக்கம் இப்போது, குரங்கு பாய்ச்சல் அடித்துள்ள எம்.பி. தொட்டு மதில் மேல் பூனையாகத் தருணம் பார்த்துக் கொண்டு நிற்கின்ற அரசியல்வாதிகள் வரை... பலரது அரசியலை மக்களாகிய நாம் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றோம்.

இதுவரை முஸ்லிம் கட்சிகள், அரசியல்வாதிகளின் பரிந்துரைகளை நம்பி, ஒரு குறிப்பிட்ட ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களித்ததால் சமூகத்திற்குக் கிடைத்த நன்மை என்ன? சுயநல நகர்வுகளால் ஏற்பட்ட அனுகூலங்களை விட இழப்புக்களே அதிகம் என்பதை மறுக்க முடியுமா ?

நீங்கள் மொத்தமாக முஸ்லிம் சமூகத்தின் வாக்குகளைக் கூட்டி அள்ளிக் கொண்டு போய், ஆட்சியாளர்களின் முன்னே கொட்டிவிட்டு, சில பொற்காசுகளை அல்லது பதவிகளைப் பெற்றுக் கொண்டீர்கள். அன்றேல், உங்களது கோப்புகளைப் பாதுகாத்தீர்கள். இதனால் சமூகத்திற்குக் கிடைத்த நன்மைகள் என்ன என்று கூற முடியுமா?

முஸ்லிம் சமூகத்தின் காணிப் பிரச்சினைகள், அதன் மீதான இனவாத நெருக்கடி, மத ஒடுக்குமுறை, வளம் மற்றும் பதவி ஒதுக்கீடுகளில் பாகுபாடு, வாழ்வாதார நெருக்கடிகளை இத்தனை முஸ்லிம் கட்சிகள், எம்.பிக்களும் தீர்த்து வைக்க முடிந்ததா? இல்லை.

அப்படியென்றால், எந்த முகத்தை வைத்துக் கொண்டு இந்த முறையும் ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு ஆதரவளிக்குமாறு அல்லது புறக்கணிக்குமாறு பரிந்துரை செய்வதற்கு முஸ்லிம் தலைவர்களும், எம்.பிக்களும் களத்தில் குதித்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

ரணிலையா, சஜித்தையா அல்லது அனுரவையா ஆதரிப்பது என்பது இங்குப் பிரச்சினையல்ல!

மாறாக, முஸ்லிம் அரசியல்வாதிகளின் போலி நாடகங்களை நம்பி, சமூகம் தன் முடிவுகளை எடுக்கத் தேவையில்லை. ஏனெனில், இங்கே எந்த முஸ்லிம் கட்சித் தலைவருக்கும் பாராளுமன்ற உறுப்பினருக்கும் நிலையான கொள்கையோ நிலைப்பாடோ இல்லை. சமூகம் சார்ந்து முடிவெடுப்பதாக ஒரு படத்தைக் காட்ட முற்பட்டாலும் நிஜத்தில் அவ்வாறில்லை.

எனவே, முடிவுகள் சரியாக இருக்க வேண்டும். இதில் கட்சியின் தலைவரும் எம்.பிக்களும் நிலையாக இருக்க வேண்டும். 'குரங்கு' அரசியல் மனநிலை கூடாது. மதில்மேல் பூனைகளும் கீழிறக்கப் பட வேண்டும். அற்பத்தனமான அரசியலைப் பேசி, இனவாதம் என கூப்பாடு போட்டு, கொச்சையாகப் பிரசாரங்கள் செய்ய வேண்டியதில்லை.

சரியான வழித்தடத்தில் முஸ்லிம் வாக்காளர்களை வழி நடத்தத் தகுதியற்ற அரசியல் தலைவர்கள், முன்னாள் இந்நாள் எம்.பிக்கள் முடிவெடுப்பதற்கான பொறுப்பை சமூகத்தின் கையில் கொடுத்துவிட்டு, உங்களது சொந்தக் கூடாரங்களுக்கு ஒதுங்கிக் கொள்ளலாம்.

ஏனென்றால், சுயநல தலைவர்கள், எம்,பிக்களுக்கு பின்னால் மந்திரித்து விடப்பட்ட ஆடுகளைப் போல முஸ்லிம் சமூகம் இனியும் செல்ல முடியாது.



## வாழ்வியல் தரிசனம்

அராஜகம், சண்டித்தனம் செய்து தங்கள் பொழுதுபோக்கு என செய்யும் கூட்டம் வளர்ந்து பெருகிக்கொண்டே இருக்கிறது.

யாரோ, எவரோ வீதியில் வாக்குவாதம் செய்தால், அதை ஊதிப் பெருக்க என ஒரு பெரும் கூட்டம், சண்டியர் கூட்டம், சொல்லி வைத்தது போல் வந்து விடுகின்றது. இவை எல்லாம் இப்போது சாதாரண நிகழ்வாக மாறிவிட்டது.

கூட்டம் சேரச் சேர அங்கு வரும் சனங்களின் பணம், நகைகளைச் சூட்சுமமாகக் கொள்ளையடித்து விடுவது, அடிக்கடி திட்டமிட்டு நடக்கின்றது. மானுடம் மரித்து விட்டது என எண்ணத் தோன்றுகின்றது.

இந்தச் செயல்கள் தொடர்ந்தால், பாதுகாப்பு மக்களுக்கு எப்படிக் கிடைக்கப் போகிறது? பொலிஸார் உறக்கத்தில்!

குற்றம் புரிவதையே தொழில் என செய்தால், இத்தகைய குற்றச் செயல்களை அடக்கி ஒடுக்குவது யார்? பொலிஸார் என்ன செய்கிறார்கள்? கண் முன்னே நடக்கும் கோர நிகழ்வுகளை ரசித்துக் கொள்வது அதனுடன் இணைவதும் நாட்டின் சாபக்கேடு. அமைதி வேண்டும் என்கிறோம். ஆனால், அது எங்கே?

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வாய்க்கால்களும் வீதிகளும் சேதம்




கிளிநொச்சி- அக்கராயன் குளத்தில் முதன்மை வாய்க்கால்கள் சேதமடைந்து காணப்படுகின்றன. 2010இல் ஜப்பான் அரசாங்க உதவியுடன் 350 மில்லியன் ரூபாய் செலவில் அக்கராயன் குளத்தின் அணைக்கட்டு வான் பகுதிகள் புனரமைக்கப்பட்டது.

இடது, வலது கரை வாய்க்கால்களில் முக்கிய இடங்களில் கொங்கிறீட் கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், குளத்தையும் வாய்க்கால்களையும் புனரமைப்பதற்கு 2010 இல் 1,000 மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுவதாக அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டது.

இந்த 14 ஆண்டுகளில் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்ற சிறியளவிலான நிதியில் சிறிய வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அக்கராயன் குளத்தில் முதன்மை வாய்க்கால்கள் புனரமைக்கப்படாததன் காரணமாகப் பல இடங்களில் நீர்ப் பாசன வாய்க்கால்கள் சேதமடைந்திருப்பதன் காரணமாக தற்போது சிறுபோகத்தில் அறுவடை செய்யப்படுகிறது நெல்லினை கூட வயலிலிருந்து வீடுகளுக்கு எடுத்து வர முடியாத அளவிற்கு வீதிகளும் வாய்க்கால்களும் சேதமடைந்து காணப்படுகிறது.

பயிர்ச் செய்கை கூட்டங்களில் வயலுக்கான வீதிகளையும் நீர்ப்பாசன வாய்க்கால் களையும் முழுமையாகப் புனரமையுங்கள் தொடர்ச்சியாக விவசாயிகள் கோரிக்கை விடுத்த போதிலும் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படவில்லை என தெரிவிக்கும் விவசாயிகள் இதன் காரணமாக நெற்செய்கை முயற்சிகள் பெரும் தடைகளை எதிர்கொண்டு உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்



# பரவசப் பயணம்



திருச்செல்வம் ஜனனீ
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

நான் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஊடகக்கற்கையில் மூன்றாவது வருட படிப்பை படித்துக் கொண்டிருக்கும் ஒரு மாணவி. எனது பல்கலைக்கழக வாழ்க்கையின் ஒவ்வொரு வருடமும் எவ்வாறு நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பது எனக்கே புரியவில்லை. அதற்குள் மூன்றாவது வருடம். என்னதான் காலம் வேகமாக கடந்தாலும், பாடசாலை படிப்பை தொலைத்து விட்டோம் என்ற மனக் கவலையை போக்கும் இடமாக விளங்கியது பல்கலைக்கழகம்.

ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு செயற்பாடுகள் மறக்க முடியாத ஞாபகங்களாக எனக்கும் எனது நண்பர்களுக்கும் அமைந்தன. அவ்வாறு தான் சென்ற வருடமும் எமக்கு பல்கலைக்கழக விடுமுறை காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. வீடுகள் செல்லப் போகின்றோம் என மகிழ்ச்சியடைவதோ நண்பர்களை சில காலம் பிரியப்போகின்றோம் என கவலையடைவதோ ஒன்றும் புரியவில்லை.

எமது விடுமுறைக்கு முதல் நாள் அனைவரும் எப்போதும் ஒன்று கூடும் இடமான கன்ரீனில் ஒன்று கூடி விடுமுறையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம், கவலையாக வீட்டில் தனியாக இருந்து என்ன செய்வது? என்று யோசித்தபோது, எமக்குள் உதித்தது ஒரு எண்ணம் சுற்றுலா ஒன்று சென்றால் என்னவென்று, சரி என்று, பின்னர் நண்பன் கூறினான் "எங்குச் செல்வோம் என்பதை யோசியுங்கள், இரவுக்கு கோல் பேசும்போது சொல்ல வேண்டும்" என்றான்.

> “முதலில் தலதாமாளிகைக்கு சென்றோம். கண்டி என்றாலே அழகு. அதில் தலதாமாளிகை தனி அழகு. உள் நுழைந்ததும் தாராக்கள், அன்னப் பட்சிகள் அழகுற நீந்திக் கொண்டிருக்கும் தெப்பக்குளம். உள்ளே சென்றால் போட்டோ எடுக்க இயலாது என்பதால், முதலில் எமது பயணப் பைகளை செக் பண்ணினார்கள். பின்னர் உள்ளே விட்டார்கள்

பின்னர் கன்ரீனை விட்டு விலகி மீண்டும் கிளாஸ்சுக்குள் நுழைந்தோம். பல்கலைக்கழக விரிவுரைகள் நிறைவடைந்ததும் நான் நண்பர்களுக்குப் பாய் என்று விட்டு வீடு திரும்பினேன். எனது வீடு யாழ்ப்பாணம் என்ற படியால் வீடு சென்று அப்பாவிடம் முதலில் அனுமதி பெற்றேன். பின்னர் இரவு அலம்புவதற்கு அனைவரும் ஒன்லைன் வந்தார்கள். என்ன இடம் செல்வோம் என்ற போது அனைவரும் கூறியது என்னவோ கண்டி தான். பின் யோசித்தோம் கண்டி மட்டுமல்லாது அருகே உள்ள நுவரெலியா, மாத்தளைக்கும் செல்வோம் என்று.

நாங்கள் மொத்தமாக 15 பேர் எமது மீடியா நண்பர்களிடமும் எமது பிளான் பற்றிக் கூறினோம். அவர்களில் ஒரு 17 பேர் வருவதாகக் கூறினர். விடுமுறைக்கு மறுநாள் செல்வோம் என்று எல்லோரிடமும் கூறினோம். எனது நண்பர்களில் சொந்தக்காரரர்கள் யாரோ தான் பஸ் டிரைவர் என்றதால் எமக்கு 'பண்'ணுக்கு பஞ்சமில்லை என எண்ணினோம். முதல் நாள் மிகவும் ஆர்வமாகத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டோம்.


மறுநாள் காலையில் அனைவரும் நான்கு மணியளவில் ஜெப்பனா பஸ் ஸ்டாண்டில் நிற்குமாறு கூறிவிட்டு அனைவரையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டோம். எல்லோரும் பாட்டு போட்டு 'என்ஜோய்' பண்ணிக் கொண்டு சென்று கொண்டிருந்தோம். சிறிது நேரத்தில் முறுகண்டி பிள்ளையார் ஆலயம் வந்தது எங்குச் செல்வதென்றாலும் அங்குச் சென்று வணங்கி விட்டுச் செல்ல வேண்டும் என்பது ஐதீகம். ஆதலால் நாம் சென்று பிள்ளையாரை வணங்கி அவரின் ஆசியைப் பெற்று விட்டு அங்கு கச்சான் 'பெமஸ்' என்பதனால் போகப்போகக் கொறிப்பதற்காக அதனையும் வாங்கிக் கொண்டு பயணத்தை ஆரம்பித்தோம்.

> “என்னவொரு இயற்கையழகு... கோவிலுக்கு அருகே அழகான ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அங்கே போய் கால் நனைத்த போது, கால் தடம் ஒன்று தெரிந்தது. அப்போது எமக்கு நினைவுக்கு வந்தது அது ஆஞ்சநேயரின் கால் தடமென்று

நண்பர்களுடன் கும்மாளம் அடித்துக் கொண்டு சென்றதால் நேரம் போனதே தெரியவில்லை. காலை 10 மணியளவில் கண்டியை அடைந்தோம். நாம் ஒரு ஹோட்டலை புக் செய்து இருந்தோம். அங்கே சென்று குளித்துவிட்டு ஒரு மணி நேரத்தில் கண்டியில் உள்ள இடங்களைச் சுற்றிப் பார்க்க ஆயத்தமானோம். முதலில் தலதாமாளிகைக்கு சென்றோம். கண்டி என்றாலே அழகு. அதில் தலதாமாளிகை தனி அழகு. உள் நுழைந்ததும் தாராக்கள், அன்னப் பட்சிகள் அழகுற நீந்திக் கொண்டிருக்கும் தெப்பக்குளம். உள்ளே சென்றால் போட்டோ எடுக்க இயலாது என்பதால், முதலில் எமது பயணப் பைகளை செக் பண்ணினார்கள். பின்னர் உள்ளே விட்டார்கள். முதலில் மாளிகையினுள் சென்று அனைத்தையும் பார்த்தோம். புத்தரின் புனித தந்த தாது தவிர அங்கே உள்ள மற்றைய பிரதான விடயம் இறந்த யானையின் சிலையமைப்பு அங்கு நுழைந்த போது கண்ணே கலங்கி விட்டது. அவ்வாறே உண்மைத்தன்மையானதாக விளங்கியது.அருகே அந்த யானையின் வரலாறும் புகைப்படமாகப் பொறிக்கப்பட்டிருந்தது. மிகவும் கவலையாக இருந்தது. அங்கிருந்து ஒரு மணிநேரத்தின் பின் புறப்பட்டு விட்டு ஒரு சாப்பாட்டுக் கடையில் உணவை உண்டோம்.

பின்னர் கண்டியின் அனைத்து இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு நுவரெலியா சென்றோம். மேலே உயர உயர குளிரும் அதிகரித்தது. அனைவரும் 'சுவெட்டரை' அணிந்தோம். முதலில் இலங்கையைச் சிறப்பாக அரசாண்ட எமக்கு எல்லோருக்கும் தெரிந்த பத்து தலையைக் கொண்ட இராவணன் சீதையைக் கடத்தி வைத்திருந்த 'சீதா எலிய' எனும் இடத்திற்குச் சென்றோம். என்னவொரு இயற்கையழகு... கோவிலுக்கு அருகே அழகான ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அங்கே போய் கால் நனைத்த போது, கால் தடம் ஒன்று தெரிந்தது. அப்போது எமக்கு நினைவுக்கு வந்தது அது ஆஞ்சநேயரின் கால் தடமென்று. அவ்வாறே நுவரெலியா 'ரீ பக்றி'க்கு இன்னும் பல இடங்களுக்கும் சென்று இறுதியில் மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயத்திற்குச் சென்றோம். அத்துடன், எமது பயணத்தை முடித்து 'றூம்'மிற்கு வந்து சேர்ந்தோம். பின் சிறிது ஓய்வெடுத்து விட்டு மறுநாள் வீடு திரும்பினோம்.

மலைநாடு என்றாலே இயற்கைக் காட்சிகளுக்குப் பஞ்சம் இல்லை என்று தான் சொல்லலாம். பச்சை பசேலென வளர்ந்த தேயிலைத் தோட்டங்கள், வானளாவிய மலைத் தொடர்கள், நீர்வீழ்ச்சிகள் இன்னும் பல சொல்லிக் கொண்டே போகலாம். எமது விடுமுறையைப் பயனுள்ளதாகவும் சந்தோஷமான தொன்றாகவும் ஆகவும் மாற்றி அமைத்தோம். மிகவும் 'என்ஜோய்புள்'ளாக ஆக இருந்தது அந்தப் பயணம். இச்சுற்றுலா எனது வாழ்நாளில் மறக்க முடியாத பரவசப் பயணமாக அமைந்தது.





# காதலிக்கும் ஹர்திக்?

கிரிக்கெட் வீரர் ஹர்திக் பாண்டியாவும், செர்பியாவை சேர்ந்த நடிகை நடாஷா ஸ்டான்கோவிச்சும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள். திருமணமாகி 4 ஆண்டுகளில் ஹர்திக் பாண்டியாவும், நடாஷாவும் பிரிந்து விட்டார்கள்.

கணவரை பிரிந்த பிறகு, மகன் அகஸ்தியாவுடன் தன் நாடான செர்பியாவுக்கு சென்று விட்டார் நடாஷா. அங்கிருந்து தினமும் இன்ஸ்டாகிராமில் போஸ்ட் போட்டு வருகிறார்.

இந்நிலையில், ஹர்திக் பாண்டியாவும், இங்கிலாந்தை சேர்ந்த பாடகியும், டிவி நடிகையுமான ஜாஸ்மின் வாலியாவும் தனித்தனியாக இன்ஸ்டாகிராமில் போட்ட போஸ்ட்டுகளால் காதல் பேச்சு கிளம்பியிருக்கிறது.

கிரீஸுக்கு வெகேஷனுக்கு சென்றிருக்கிறார். அங்கு நீச்சல் குளம் அருகில் எடுக்கப்பட்ட வீடியோவை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ளார் ஹர்திக் பாண்டியா. அந்த வீடியோவை பார்த்தவர்களுக்கு ஜாஸ்மின் வாலியாவின் லேட்டஸ்ட் இன்ஸ்டா போஸ்ட் நினைவுக்கு வந்துவிட்டது.

# “சிறைக்கு செல்ல வேண்டும்”



சமந்தா தவறான மருத்துவ சிகிச்சைகளை சொல்கிறார். அதனால், அவர் சிறைக்கு செல்ல வேண்டும் என சமீபத்தில் மருத்துவர் ஒருவர் பரபரப்பைக் கிளப்பினார். இந்த சர்ச்சைகளுக்கு நடிகை சமந்தா விளக்கம் கொடுத்தார்.

மையோசிடிஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ள நடிகை சமந்தா, அது தொடர்பான சிகிச்சை எடுத்து வருகிறார். மேலும், தான் எடுத்துக் கொள்ளும் சிகிச்சையைப் பற்றி சமூக வலைத்தளங்களில் வெளிப்படையாகவும் பகிர்ந்து வருகிறார். அந்த வகையில், கடந்த சில தினங்களுக்கு முன்பு தனது மூக்கில் நெபுலைசருடன் கூடிய புகைப்படம் ஒன்றைப் பகிர்ந்திருந்தார்.

"வைரல் மருந்து எடுக்கும் முன்பு, நீங்கள் இந்த மாற்று வழியை முயற்சி செய்து பாருங்கள். ஹைட்ரஜன் பெராக்சைட் மற்றும் காய்ச்சி வடிகட்டிய நீர் ஆகியவற்றின் கலவையுடன் நெபுலைஸ் செய்யலாம்" என கூறியிருந்தார். இது தான் சர்ச்சைகளுக்கு வழிவகுத்தது.




# ஒரு நேரம் உணவு; 5 மணிக்கு தூக்கம்

தான் ஒரு நேரம் மட்டுமே உணவு உண்பதாக நடிகர் ஷாருக்கான், தெரிவித்திருப்பது, அவரது ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இதுபற்றி அவர் அளித்துள்ள பேட்டியில், காலை 5 மணிக்குத்தான் உறங்கச் செல்வேன். படப்பிடிப்பு இருந்தால் காலை 9 அல்லது 10 மணிக்கு எழுந்து விடுவேன். முன்னதாக வேலை முடிந்து அதிகாலை 2 மணிக்கு வீட்டுக்கு வந்து குளித்து விட்டுத் உறங்க முன் உடற்பயிற்சி செய்வேன். தினமும் ஒருவேளை மட்டும்தான் சாப்பாடு. சமீபத்தில், சுவிட்ஸர்லாந்தில் உள்ள லோகார்னோவில் நடைபெற்ற 77ஆவது பட விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றேன்.

விருதுகள் விடயத்தில் வெட்கப்படுவதில்லை. அதை வாங்குவது எனக்குப் பிடிக்கும். விழாக்களை விரும்புகிறேன். பேச வேண்டும் என்றால்தான் பதற்றமடைவேன். எனக்கு 9 மாடி அலுவலகம் உள்ளது. ஒவ்வொரு தளத்திலும் விருதுகள் உள்ளன. 300 விருதுகளைக் கொண்ட வாசிகசாலை இருக்கிறது. அது கோப்பைகளுக்கான அறையல்ல. ஆங்கில நூலகம் போன்றதுதான். அடுத்து சுஜாய் கோஷ் இயக்கும் 'கிங்' என்ற படத்தில் நடிக்கிறேன். இவ்வாறு ஷாருக்கான் கூறினார்.

## காந்தி என்ற பெயர் வைத்தால்
# “குடிக்கக் கூடாதா?”



ஏஜிஎஸ் என்டர்டெயின்மெண்ட் தயாரிப்பில், இயக்குநர் வெங்கட் பிரபு இயக்கத்தில் நடிகர்கள் விஜய், மோகன், பிரசாந்த், பிரபுதேவா, அஜ்மல், யோகி பாபு, சினேகா, மீனாட்சி சவுத்ரி, லைலா ஆகியோர் நடித்துள்ள படம் 'தி கோட்'. இப்படத்தின் டிரைலர் வெளியாகி ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றது. இதில் காந்தி என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ள விஜய், மது அருந்துவது போன்ற காட்சிகளும் இடம்பெற்றது.

இது தொடர்பான ஊடக சந்திப்பொன்றில் இயக்குநர் வெங்கட் பிரபுவிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது, " காந்தி என்ற பெயர் வைத்தால் குடிக்கக் கூடாது என்று உள்ளதா? என் நெருங்கிய நண்பரின் பெயர் கூட காந்தி தான். அவரை மையமாக வைத்து தான் கதையில் விஜய்க்கு காந்தி என பெயர் வைத்துள்ளேன். ஏன் குழப்பத்தை ஏற்படுத்துகிறீர்கள்?" என்றார்.

# பட்டையைக் கிளப்பும் 'தங்கலான்'



சுதந்திரத்தினத்தன்று 'தங்கலான்', 'டிமாண்டி காலனி 2', 'ரகு தத்தா' ஆகிய படங்கள் ரிலீஸ் ஆனது. இவற்றில் சீயான் விக்ரம் நடித்த 'தங்கலான்' படம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. நடிகர் விக்ரம் நடித்த படங்களிலேயே மிகவும் கஷ்டப்பட்டு நடித்த படம் இதுதானாம். கலவையான விமர்சனங்களை சந்தித்த போதும், 'தங்கலான்' படம் வசூல் ரீதியாக சக்கை போடு போட்டு வருகிறது. முதல் 4 நாள் வசூல் 60 கோடியை நெருங்கியுள்ளது.

வொஷிங்டன்

### கருத்துக் கணிப்பில்

# ட்ரம்ப் பின்னடைவு

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹாரிஸை அதிகாரப்பூர்வமாக அறிவிப்பதற்காக ஜனநாயக கட்சி தலைவர்கள் தயாராக வரும் நிலையில், சமீபத்திய கருத்து கணிப்பில் டொனால்ட் ட்ரம்பை விட கமலா ஹாரிஸ் முன்னிலை பெற்றுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மாகாணங்கள் முழுவதும் பயணித்து தீவிர பரப்புரையில் ஈடுபட்டுள்ளார். அவருக்கு



எதிராக துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை களமிறக்க முடிவு செய்துள்ள ஜனநாயக கட்சி அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிடவிருக்கிறது.

இந்நிலையில், சிகாகோவில் நடைபெறும் ஜனநாயக கட்சியின் மாநாட்டில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் பங்கேற்று உரையாற்ற இருக்கிறார்.

இந்நிலையில், வொஷிங்டன் போஸ் ஏபிசி நியூஸ் கருத்து கணிப்பின்படி கமலா ஹாரிஸ் குடியரசு கட்சி வேட்பாளரான டொனால்ட் டிரம்பை விட முன்னிலை பெற்றுள்ளார்.

கமலா ஹாரிஸ{க்கு 49 சதவீத ஆதரவு உள்ள நிலையில் ட்ரம்புக்கு சற்று நெருக்கமாக 45சதவீத ஆதரவு உள்ளதாக கருத்து கணிப்பு முடிவு தெரிவிக்கிறது. செப்டெம்பர் 10ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி வேட்பாளர்களின் நேரலை விவாதத்துக்கு பிறகு இந்த முடிவுகளின் போக்கு மாறலாம் என்று அமெரிக்க தேர்தல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.



ஜேர்மனி

### பெர்ரிஸ் சக்கரம் தீப்பிடித்ததில்

# 30 பேர் காயம்

ஜேர்மனியின் கிழக்கு மாகாணமான சாக்சோனியில் உள்ள லீப்ஜிக் நகரின் புறநகரில் சனிக்கிழமை (17) ஏற்பட்ட தீ விபத்தில் 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இங்கு நடைபெற்ற இசை விழாவில் பெர்ரிஸ் சக்கரம் (Ferris Wheel) திடீரென தீப்பிடித்ததால் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது.

உள்ளூர் நேரப்படி இரவு 9 மணியளவில் பெர்ரிஸ் சக்கரம் தீப்பிடித்தது.

முதலில் பயணிகள் காரில் இருந்த தீ அப்பகுதியில் பரவியதை அடுத்து மீட்புப் பணியில் உலங்கு வானூர்தி பயன்படுத்தப்பட்டதாகவும் இந்த திடீர் தீ விபத்தில் 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும், ஆனால், இந்த காயங்கள் பெரும்பாலும் ஒப்பீட்டளவில் புகையை சுவாசித்ததால் ஏற்பட்டதாக அறிகுறிகள் தெரிவிக்கின்றன என்றும் பொலிஸார் தரப்பில் கூறப்படுகின்றது.

எனினும், இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளதாக ஜேர்மனி செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளதுடன், காயமடைந்தவர்களில் நான்கு அதிகாரிகளும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர்

# ‘ஸ்கில்ஸ்பியூச்சர்’ ஆதரவுத் திட்டம்

சிங்கப்பூரில் வேலை இழந்தோருக்கு உதவி செய்யும் வகையில், 6 மாதங்களுக்கு 6,000 சிங்கப்பூர் டொலர் வரை நிதியுதவி வழங்கப்படும் என அந்நாட்டு பிரதமர் லோரன்ஸ் வோங் அறிவித்துள்ளார்.

கொவிட் பாதிப்பு, சர்வதேச அளவில் தொழில் மந்த நிலை என்பன காரணமாக, சிங்கப்பூரில் பலருக்கு வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவி வழங்கும் வகையில் ‘ஸ்கில்ஸ்பியூச்சர்’ ஆதரவுத் திட்டத்தை அந்நாட்டு அரசு தயாரித்துள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் 6 மாதங்களுக்கு 6,000 சிங்கப்பூர் டொலர் வரை நிதியுதவி வழங்கப்படும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் அல்லது தங்கள் நிறுவனங்கள் நஷ்டம் அடையும் போது, வேலை இழப்பவர்களுக்கு இந்த திட்டம் பெரிதும் உதவியாக இருக்கும்.


இந்த ஆண்டின், தேசிய தினப் பேரணியில் பிரதமர் லோரன்ஸ் வோங் பேசுகையில், “வேலையை இழந்தோருக்கு, ஸ்கில்ஸ்பியூச்சர் ஆதரவுத் திட்டத்தின் கீழ், ஆறு மாதங்கள் வரை நிதியுதவி வழங்க உள்ளோம். இந்த பணம், அவர்கள் வேலை தேடுவதற்கும், தொழில் பயிற்சி மேற்கொள்வதற்கும் உதவிக்கரமாக இருக்கும். நாங்கள் உங்களுக்கு எப்போதும் ஆதரவாக இருப்போம். சில நாடுகளில் வேலையில்லாதோருக்கான காப்புறுதித் திட்டம் செயல்பாட்டில் இருக்கிறது. அதை விட சிறப்பாக செய்ய சிங்கப்பூர் அரசு விரும்புகிறது. ஸ்கில்ஸ்பியூச்சர் திட்டம் குறித்து விவரங்களை, விரைவில் மனிதவள அமைச்சர் டான் சீ லெங் வெளியிடுவார்” என்றார்.

சென்னை

# “ரகசிய உறவுக்கு அவசியம் இல்லை”

திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும பாரதிய ஜனதா கட்சிக்கும் இடையிலான உறவு வெட்ட வெளிச்சமாகி உள்ளது என அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி கூறியிருந்ததற்கு பதிலடியாக ‘பா.ஜ.கவுடன் ரகசிய உறவு வைத்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை’ என முதல்வர் ஸ்டாலின் பதிலடி கொடுத்துள்ளார்.

சென்னை திருவொற்றியூர் சட்டசபை உறுப்பினர் கே.பி.சங்கரின் இல்லத்திருமண விழாவில் முதல்வர் ஸ்டாலின்



பேசுகையில், “கருணாநிதி நாணயம் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றதால் மகிழ்ச்சியில் இ.பி.எஸ்.க்கு தூக்கம் வரவில்லை.

நிகழ்ச்சியை நடத்தியது தி.மு.க., அல்ல, மத்திய அரசு என்பதை கூட இ.பி.எஸ். புரிந்து கொள்ளவில்லை. மத்திய அரசு நிகழ்ச்சி என்பதால் நாணயம் வெளியீட்டு விழாவில் இ.பி.எஸ்ஐ அழைக்கவில்லை. எம்.ஜி.ஆர். நாணய வெளியிட்டின் போது இ.பி.எஸ்.,ஐ மத்திய அரசு மதிக்கவில்லை. ஜெயலலிதாவால் வளர்க்கப்பட்டவர்கள் அவருக்காக இரங்கல் கூட்டம் நடத்தியுள்ளார்களா? பா.ஜ.கவுடன் ரகசிய உறவு வைத்துகொள்ள அவசியம் இல்லை. இ.பி.எஸ். போன்று ஊர்ந்து சென்று பதவி வாங்கும் அவசியம் தி.மு.கவுக்கு இல்லை. ஆதரித்தாலும், எதிர்த்தாலும் தி.மு.க. எப்போதும் அதன் கொள்கையோடு இருக்கும்” என்று ஸ்டாலின் பேசினார்.

கொல்கத்தா

### பெண் மருத்துவர்

# கொலையில் அதிர்ச்சி தகவல்

கொல்கத்தா பெண் மருத்துவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்த சம்பவத்தில் பல அதிர்ச்சிகர தகவல்கள் வெளிவந்தமுள்ளன.

பாலியல் வல்லுறவு செய்து கொலை செய்யப்பட்ட பெண் மருத்துவரின் பிரேதப் பரிசோதனை அறிக்கையில் இடம்பெற்றுள்ள தகவல்களே இந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த 9ஆம் திகதி மேற்கு வங்க மாநிலம் தலைநகர் கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி. கர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணியில் இருந்த இளம்பெண் மருத்துவர் உடலில் இரத்த காயங்களுடன் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார். அவரை பாலியல் வல்லுறவு செய்து, கால் எலும்பை முறித்து, மிகவும் கொடூரமான முறையில் கொலை செய்ததாக சொல்லப்பட்டது.

இந்த நிலையில், இளம்பெண் மருத்துவரின் பிரேதப் பரிசோதனையில், தலை, கழுத்து, முகம், கைகள் மற்றும் பிறப்புறுப்பு என 14 இடங்களில் காயங்கள் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. மேலும், கழுத்தை நெரித்து கொலை செய்து இருப்பதாகவும், கொடூரமான முறையில் வன்புணர்வு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேருலும், அவரின் நுரையீரலில் இரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளதாகவும், உடலின் பல இடங்களில் இரத்தம் உறைந்துள்ளதாகவும் பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.




இதனிடையே, இவர் கூட்டு பாலியல் வல்லுறவு செய்யப்பட்டுள்ளாரா என்ற கோணத்தில் இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

நாட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த சம்பவத்தில் முக்கிய குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளை கைது செய்து, தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்றும் மருத்துவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தி மருத்துவர்கள் சங்கத்தினர் தொடர்ந்து நாடு தழுவிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

### வலைப்பந்தாட்டத்தில்

# சைவப்பிரகாச கல்லூரி சாதனை






■ பு.கஜிந்தன்

வடக்கு மாகாண ரீதியில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில், 20 வயதின் கீழ் பிரிவில் வவுனியா சைவபிரகாச மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும், உடுவில் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும், மானிப்பாய் மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

அத்துடன், 18 வயதுப் பிரிவின் கீழ் நடைபெற்ற போட்டியில், வவுனியா சைவபிரகாச மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும், பரந்தன் இந்து மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தையும், அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டது. உடுவில் மகளிர் கல்லூரியின் 200ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு குறித்த போட்டிககளின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் உடுவில் மகளிர் கல்லூரியின் மைதானத்தில் திங்கட்கிழமை (19) இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் செல்வி ரொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டு நிகழ்வில், விருந்தினர்களாக வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செந்தில் குமரன், உடுவில் மகளிர் கல்லூரியின் ஆன்மீக குரு ரெப.லிங்கேசன், உடுவில் மகளிர் கல்லூரியின் விளையாட்டு செயலாளர் ப.தர்மகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

### கல்குடா வலய மெய்வல்லுநர் போட்டிகளில்

# செங்கலடி ம.க, முதலிடம்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

மட்டக்களப்பு-கல்குடா வலய மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில், செங்கலடி மத்திய கல்லூரி 15 முதலிடங்களையும், 14 இரண்டாமிடங்களையும், 15 மூன்றாமிடங்களையும் பெற்று 10 ஆண்டுகளுக்குப் பின் வலயத்தில் முதலாம் இடத்தை பெற்று மாகாண மட்ட போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.









# தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி-முக்கொம்பன் மகா வித்தியாலய 17 வயது பிரிவு ஆண்கள் அணி கைப்பந்து போட்டியில், மாகாண மட்டத்தில் இரண்டாமிடம் பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இப்பாடசாலையின் 20 வயதுப் பிரிவு ஆண்கள் அணி மாகாண மட்ட கைப்பந்து போட்டியில் இரண்டாமிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு இரண்டாவது தடவையாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# சதுரங்கத்தில் வெற்றி



திருகோணமலை, தி/கிண்ணியா/ அல் அஸ்ஹர் வித்தியாலயத்தில் தரம் 3இல் கற்று வருகின்ற ஆக்கிஸ் ரயான், தனிநபர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றியீட்டி, தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளார்.

இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கத்தினால் 2024ஆம் ஆண்டுக்கான பாடசாலைகள் மட்டத்தில் இப்போட்டி நடத்தப்பட்டது.



### இத்தாலிய சீரி ஏ தொடர்:

# தோற்றது நாப்போலி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், ஹெலாஸ் வெரோனாவின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (18) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் நாப்போலி தோற்றது.

இதேவேளை, கைகரியின் மைதானத்தில் திங்கட்கிழமை (19) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் றோமா சமப்படுத்தியது.

### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# மன்செஸ்டர் சிற்றி வெற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், செல்சியின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (18) நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி 2-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

சிற்றி சார்பாக எர்லிங் ஹலான்ட், மட்டியோ கொவாசிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 20,ஆகஸ்ட் 2024, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.